

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | டிசம்பர் 05, 2019 | புரட்சி 18 | முழக்கம் 47 | விலை: ரூ.3.00


## கோத்தபய வருகைக்கு எதிர்ப்பு

# இலங்கை தூதரக முற்றுகை: கழகத் தோழர்கள் கைது

*இலங்கை அதிபராகியுள்ள 'போர்க் குற்றவாளி' கோத்தபய ராஜபக்சே இந்திய வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கை தூதரகத்தை முற்றுகையிடச் சென்ற திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.*



2009 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நடந்தபோது இலங்கை அரசின் இராணுவ செயலாளராக செயல்பட்டவர் கோத்தபய ராஜபக்சே. அவர் இப்போது சிங்கள பெரும்பான்மையினரின் ஓட்டுகளைப் பெற்று அதிபராகிவிட்டார். இனப்படுகொலை நடந்தபோது அதிபராக இருந்த ராஜபக்சே பிரதமர் பதவிக்கு வந்து விட்டார். ராஜபக்சே மற்றும் கோத்தபய ராஜபக்சே சகோதரர்கள் மீது போர்க் குற்ற விசாரணை நடத்தி தண்டிக்கப்பட வேண்டும் என்று உலகம் முழுதும் தமிழர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். இந்த நிலையில் இந்திய அரசின் வரவேற்பையேற்று கோத்தபய ராஜபக்சே இந்தியா வந்துள்ளார். இந்தியா அவருக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு அளித்துள்ளது. தலைநகர் டெல்லியில் மதி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தலைமையில் மதி.மு.க.வினர் ஜந்தர் மந்தர் பகுதியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தி கைதானார்கள்.

சென்னையில் நவம்பர் 29 அன்று பகல் 11 மணியளவில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் இலங்கை தூதரகத்தை முற்றுகையிடச் சென்ற கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். போராட்டத்துக்கு மாவட்ட செயலாளர் இரா. உமாபதி தலைமைதாங்கினார்.

கோத்தபய ராஜபக்சே, ஈழத் தமிழர் இனப் படுகொலையில் முக்கிய பங்காற்றியவர். அவருக்கு இந்திய அரசு வரவேற்பு அளிப்பது தமிழர்களின் உணர்வுகளை அவமதிப்பதாகும். கோத்தபய ராஜபக்சேயிடம் பேச்சுவார்த்தை நடத்தும் இந்திய அரசு இப்போதாவது ஏற்கனவே அய்.நா.வில் இலங்கை அரசே கொண்டு வந்த தீர்மானத்தை மதித்து மனித உரிமை மீறல் குறித்த கலப்பு விசாரணையை நடத்துமாறு இலங்கை அதிபரிடம் வலியுறுத்த வேண்டும்.

ஈழத் தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதாக இலங்கை அரசு தந்த உறுதிமொழியை செயல்படுத்துமாறு வற்புறுத்துவதோடு தமிழர் பகுதியில் துப்பாக்கி ஏந்திய இராணுவம் நிறுத்தப் பட்டிருப்பதை திரும்பப் பெற்று தமிழர்களின் அமைதியான வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டும். தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை தாக்குவதையும் படகுகள் பறிமுதல் செய்வதை நிறுத்தவும் வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்து இந்தப் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் ஈழவேந்தன், அண்ணாமலை, மயிலை சுகுமார் மற்றும் கழகத் தோழர்கள், மே 17 இயக்கத்தைச் சார்ந்த 3 தோழர்களும் பங்கேற்று கைதானார்கள். 50 பேர் கைது செய்யப்பட்டனர்.

# சட்ட எரிப்பு நாளில் கழகத் தோழர்கள் ஜாதி ஒழிப்பு உறுதி ஏற்றனர்

**திருச்சி :** சட்ட எரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைச் சென்று சிறையிலேயே உயிர்நீத்த



பட்டுக்கோட்டை இராமசாமி, மணல்மேடு வெள்ளைச்சாமி ஆகியோரின் நினைவிடத்தில் திருச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் மாவட்டத் தலைவர் மீ.இ. ஆரோக்கியசாமி தலைமையில் ஜாதி ஒழிப்பு உறுதிமொழி ஏற்பும், அண்மையில் முடிவெய்திய இராவணனுக்கு வீரவணக்க நிகழ்வும் 26.11.2019 அன்று காலை 10:30 மணியளவில் நடைபெற்றது. தந்தை பெரியார் திராவிடர் கழகக் கொள்கைப் பரப்புரைச் செயலாளர் சீனி. விடுதலையரசு பங்கேற்று வீர வணக்க உரை நிகழ்த்தினார்.

மக்கள் அதிகாரம் அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றினார். திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட அமைப்பாளர் புதியவன் உறுதி மொழி வாசிக்க தோழர்கள் உறுதி மொழி ஏற்றனர். இறுதியாக மனோகர் நன்றி கூறினார். நிகழ்வில், திராவிடர் விடுதலைக் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி, மக்கள் அதிகாரம், மக்கள் கலை இலக்கிய பண்பாட்டு கழகம், காட்டாறு ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர்.

**கோபி :** கோபி பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்ட பிரிவுகளைக் கொளுத்தி சிறையில் உயிர்நீத்த போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்துதல் மற்றும் மறைந்த பெரியார் தொண்டர் இராவணனுக்கு நினைவேந்தல் நிகழ்ச்சியும் கோபி பெரியார் திடலில் அமைந்துள்ள பெரியார் சிலை முன்பு நடைபெற்றது.

நிகழ்விற்கு திமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோ.ப. வெங்கிடு தலைமையேற்க தபெதிக உமா, திராவிடர் கழக மாவட்டத் தலைவர்



சீனிவாசன் ஆகியோர் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர். தமிழ்நாடு அறிவியல் மன்றம் சார்பில் விசயசங்கர், இராவணன் படத்திற்கு மாலை அணிவித்த பின் தோழர்கள் அனைவரும் சாதி ஒழிப்பு போராளிகளுக்கு வீரவணக்க முழக்கமிட்ட பின் அனைவரும் சாதி ஒழிப்பு உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். நிகழ்வில் தி.வி.க., த.பெ.தி.க., தி.க., புஇமு, தி.மு.க. குமணன், திராவிடர் கழகம் உள்ளிட்ட அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர்.

**கோவை :** கோவை மாநகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் காந்திபுரம் பெரியார் சிலை முன்பு ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளைக் கொளுத்தி சிறையிலும் சிறைக்கு வெளியேயும் உயிர் நீத்த ஜாதி ஒழிப்பு போராளிகளின் 62ஆம் ஆண்டு நினைவையொட்டி கொள்கை



(4ஆம் பக்கம்)

## ‘நள்ளிரவு நாடகங்கள்’

குடியரசுத் தலைவர், ஆளுநர், பிரதமர் பதவிகளுக்கான அதிகாரங்களை அப்பட்டமாக முறைகேடாகப் பயன்படுத்தி முகத்தில் கரியைப் பூசிக் கொண்டிருக்கிறது, நடுவண் ஆட்சி.

மகாராஷ்டிராவில் சிவசேனையுடன் கூட்டணி அமைத்து தேர்தலில் வெற்றி பெற்ற நிலையில் சிவசேனையிடம் நாடாளுமன்றத் தேர்தலின்போது அளித்த வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டு முதல்வர் பதவியைத் தன் வசமே வைத்துக் கொள்ள பா.ஜ.க. செய்த முயற்சியை சிவசேனை ஏற்கவில்லை. பா.ஜ.க. ஆட்சி அமைக்க முடியாத நிலையில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அறிவித்தார்கள். சிவசேனை தேசியவாத காங்கிரஸ்-காங்கிரஸ் இணைந்து கூட்டணி ஆட்சி அமைக்கும் முயற்சிகள் நடந்தன. திடீரென்று தேசியவாத காங்கிரசிலிருந்த சரத்பவார் அண்ணன் மகன் அஜித் பவாருடன் பேரம் பேசி அவர் மூலமாக தேசியவாத காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி பா.ஜ.க. ஆட்சி அமைக்க குறுக்கு வழியில் முயற்சித்தது. சிவசேனை-தேசியவாத காங்கிரஸ்-காங்கிரஸ் கூட்டணி பதவி ஏற்க தயாரான நிலையில் நள்ளிரவில் குடியரசுத் தலைவர் மாளிகையின் கதவுகளைத் தட்டி மகாராஷ்டிராவில் குடியரசுத் தலைவர் ஆட்சி நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. கட்சியின் கட்டளைக்கு பணிந்தார் குடியரசுத் தலைவர். விடியற்காலை பா.ஜ.க. முதல்வராக பட்னாவிசும், துணைத் தலைவராக அஜித் பவாரும் பதவியேற்க ஆளுநர் அழைத்தார். போதுமான சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்களா என்பதைப்பற்றிகூட ஆளுநர் கருதிப் பார்க்கவில்லை.

குடியரசுத் தலைவர் ஆட்சியை விலக்கிக் கொள்ள அமைச்சரவையைக் கூட்டி முடிவு எடுக்க வேண்டும் என்ற சட்ட நெறிமுறைகள் புறந்தள்ளப்பட்டு விட்டன. அமைச்சரவையைக் கூட்டாமலேயே அவசரமான நிலையில் முடிவெடுக்கக்கூடிய 12 விதியின் அதிகாரத்தைப் பயன்படுத்தி பிரதமர் மோடி ஒப்புதல் அளித்துள்ளார். நள்ளிரவுக்குள் குடியரசுத் தலைவர் ஆட்சியை நீக்கி விடியற்காலை பா.ஜ.க. அமைச்சரவை பதவி ஏற்க வேண்டும் என்பது அவ்வளவு அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையா?

அஜித் பவார் மீது கூட்டுறவு வங்கியில் ஊழல் செய்த ஊழல் குற்றச்சாட்டு இருந்தது. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தவுடன் அஜித்பவாரை சிறைக்குள் தள்ளுவோம் என்று தேர்தல் பரப்புரை செய்த பா.ஜ.க., அவரையே துணை முதல்வராக்க பதவி வெறியில் துடித்தது. மூன்று நாள் மட்டுமே நீடித்த பா.ஜ.க. ஆட்சியில் ஊழல் வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன.

உச்சநீதிமன்றம் விதித்த ‘கெடு’வுக்குள் மெஜாரிட்டியை நிரூபிக்க குதிரை பேரம் படியாத நிலையில் பட்னாவிஸ் பதவியிலிருந்து ஓட்டம் பிடித்தார். அஜித் பவார் தவறை உணர்ந்து மீண்டும் தேசியவாத காங்கிரசுக்குத் திரும்பினார்.

“ஜனநாயக மதிப்பீடுகளைக் காப்பாற்றவும் சட்டமன்ற உறுப்பினர்களை விலைபேசி வாங்கும் குதிரை பேரத்தைத் தடுக்கவும் உச்சநீதிமன்றம் தலையிட வேண்டியிருக்கிறது” என்று உச்சநீதி மன்றமே கூறியது.

அமித்ஷா, மோடி இரட்டையர்கள் ‘சாணக்கியர்கள்’, ‘வானத்தை வில்லாக வளைப்பவர்கள்’ என்றெல்லாம் ஏற்றிப் போற்றப்பட்ட பிம்பங்கள் உடைந்து சுக்குநூறாகிக் கிடக்கின்றன. உச்சநீதிமன்றமே இவர்களின் நேர்மைக்கு சான்றிதழைக் கொடுத்திருக்கிறது. ‘தங்களுக்கு ஆதரவு தரும் சட்டமன்ற உறுப்பினர்கள்’ என்று பா.ஜ.க. தரப்பில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ‘ஆவணத்தைப்’ பார்த்து நீதிபதி குலுங்கி குலுங்கி சிரித்திருக்கிறார். வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் பட்டியலை பா.ஜ.க. ஆட்சி அமைக்க ஆதரவளித்தோர் வருகைப் பதிவேட்டை பட்டியலாக நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததுதான் நீதிபதியின் சிரிப்புக்கான காரணம்.

இப்போது காங்கிரஸ்-தேசியவாத காங்கிரசுடன் சிவசேனைக் கட்சியின் உத்தவ் தாக்கரே முதல்வராகி யிருக்கிறார். குறைந்தபட்ச வேலைத் திட்டத்தில் ‘மதச் சார்பின்மை’ கொள்கையை ஏற்று செயல்பட சிவசேனை முன்வந்திருக்கிறது. ‘இந்துத்துவா’ கொள்கையில் அக்கட்சி சமரசம் செய்து கொண்டிருப்பதைக் குறிப்பிட வேண்டும். இட ஒதுக்கீடு கொள்கையை உறுதியாக செயல்படுத்துவதும் தனியார் துறையில் 80 சதவீத வேலை வாய்ப்புகளை மராட்டிய மக்களுக்கே வழங்க வேண்டும் என்பதும் குறைந்தபட்ச வேலைத் திட்டத்தின் பாராட்டத்தக்க முக்கிய அம்சங்கள். சிவசேனை-பா.ஜ.க. இணைந்து மகாராஷ்டிராவை மதவெறி பூமியாக மாற்றிவந்த நிலையில் இரண்டு கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட முரண், ‘மதவெறி’க்கு கடிவாளம் போட்டிருக்கிறது. இனி அடுத்த நிகழ்வுகளை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# இலாபம் தரும் பொதுத் துறை நிறுவனங்கள் தனியாருக்கு விற்கும், மோடி ஆட்சி

பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேசன், ஷிப்பிங் கார்ப்பரேசன், கன்டெய்னர் கார்ப்பரேசன், தெரி நீர்மின் உற்பத்தி கார்ப்பரேசன், வடகிழக்கு மின்சக்தி கார்ப்பரேசன் ஆகியவற்றைத் தனியாருக்கு விற்க முடிவெடுத் துள்ளதாக அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் அறிவித்தார். இவையனைத்தும் மத்திய பொதுத் துறை நிறுவனங்கள். மத்திய அரசு எதிர் கொள்ளும் நிதிப் பற்றாக்குறையை சமாளிப் பதற்காகத் தான் இந்த முடிவு என்கிறார் அமைச்சர். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிப்பவை பொதுத்துறை நிறுவனங்கள். அவற்றைத் தனியாருக்கு விற்பது நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதாரமே பாதிக்கப்படுவதில் போய்த்தான் முடியும்.

**வளர்ச்சியின் அடித்தளம்**

பொதுவாக கச்சா எண்ணெய், சுத்திகரிப்பு, எரிவாயு, உருக்கு, மின்சாரம், நிலக்கரி, சிமெண்ட், உரம் ஆகிய 8 தொ ழில்களை பொருளாதாரத்தின் முதன்மையான தொழில்கள் என்று அரசு அடையாளப்படுத்துகிறது. இதன் பொருள், ஒட்டுமொத்தத் தொழில் வளர்ச்சிக்கு இவை அடிப்படையானவை என்பதே. இத்தகைய பொதுத்துறை நிறுவனங்கள்தான் கடந்த 72 ஆண்டுகளில் நமது தேசம் அடைந்துள்ள வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்குகின்றன. தொழில் வளர்ச்சிக்கு மட்டுமல்ல, இந் நிறுவனங்கள் வரியாக, ஈவுத்தொகையாக மத்திய அரசுக்கு பல லட்சம் கோடி ரூபாய் செலுத்தி உள்ளன. இம்மாதிரியான பொதுத்துறை நிறுவனங்களை அரசு தனி யாருக்கு விற்கக்கூடாது. அப்படி விற்பது விதைநெல்லை வீசியெறியும் விபரீதமன்றி வேறென்ன?

**நட்டத்தில் இயங்குபவை அல்ல!**

மேற்கண்ட பொதுத்துறை நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குபவை அல்ல. இவை யனைத்துமே இலாபமீட்டி வருபவை. பாரத் பெட்ரோலிய எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்தின் கடந்தாண்டு வருமானம் ரூ.3,37,622 கோடி. இலாபம் மட்டும் ரூ.11,964 கோடி. (மத்திய அரசுக்கு செலுத்திய வரி மட்டும் ரூ.40,347 கோடி).

கன்டெய்னர் கார்ப்பரேசன் நிறுவனத்தின் வருவாய் ரூ.7,214 கோடி. இலாபம் ரூ.1,789 கோடி.

ஷிப்பிங் கார்ப்பரேசன் நிறுவனத்தின் கடந்தாண்டு வருமானம் ரூ. 4,144 கோடி. இலாபம் மட்டும் ரூ.611.24 கோடி.

வடகிழக்கு மின்சக்தி நிறுவனத்தின் கடந்தாண்டு வருவாய் ரூ.1,632 கோடி. இலாபம் ரூ. 293 கோடி.

தெரி நீர் மின் உற்பத்தி நிறுவனத்தின் கடந்தாண்டு வருவாய் ரூ. 272.8 கோடி. இலாபம் ரூ.77.1 கோடி.

இவ்வாறு அரசின் வருவாய்க்கும்,நாட்டின் பொருளா தாரத்திற்கும் முதுகெலும்பாக விளங்குகிற இத்தகைய பொதுத் துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்பது பொருளாதார வளர்ச்சியை கடுமையாக முடக்கிவிடும்.

**பெட்ரோலிய பொருட்கள் உற்பத்தி**

சுதந்திரமடைந்த 1947இல் இந்தியாவினுடைய பெட்ரோலிய பொருட்களின் தேவை 27.2 இலட்சம் டன். இந்தத் தேவை பெரும் பான்மையாக இறக்குமதி மூலமே பூர்த்தி செய்யப்பட்டது. காரணம் அன்றைய உள்நாட்டு சுத்திகரிப்பு திறன் 3 இலட்சம் டன் மட்டுமே. அப்போது பெட்ரோலியத்தொழில் முழுக்க முழுக்க பர்மா ஷெல், இஎஸ்எஸ்ஓ, கால்டெக்ஸ் ஆகிய மூன்று வெளிநாட்டுப் பன்னாட்டுக் கம்பெனிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. எண்ணெய், எரிவாயு உற்பத்திக்காக பல பொதுத்துறை நிறுவனங்களைத் தொடங்கிய பிறகோ நிலைமை முற்றிலும் மாறியது.

தற்போது இந்தியாவில் கச்சா எண்ணெய் உற்பத்தி 3.20 கோடி டன். இதில் 2.29 கோடி டன் அளவுக்குப் பொ துத்துறை நிறுவனங்கள் உற்பத்தி செய்கின்றன. தனியார் கம்பெனிகள் உற்பத்தி செய்வது 90.6 இலட்சம் டன் மட்டுமே. இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பில் 14.88 கோடி டன் பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு; 9.6 கோடி டன் தனியார் நிறுவனங்களின் பங்கு. எண்ணெய், எரிவாயு நிறுவனங்களின் எரிசக்திதான் தொழில், விவசாயம், சேவைத்துறை, ஏன் இந்திய பொருளா தாரத்திற்கே ரத்த நாளமாக விளங்கியது, விளங்கி வருகிறது.

**தனியார் கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு ஆதரவாக...**

கச்சா எண்ணெய் உற்பத்திக்காக ஓஎன்ஜிசி நிறுவனம் ஆய்வு செய்து எண்ணெய் படுகைகளைக் கண்டுபிடித்து 48 எண்ணெய் கிணறுகளை அமைத்தது. ஆனால், அந்தக் கிணறுகள் அனைத்தையும் மத்திய அரசாங்கம் உள்நாட்டு, வெளிநாட்டுத் தனியார் கம்பெனிகளுக்குத் தாரை வார்த்து விட்டது. மேலும், இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்தினுடைய ரூ.40,000 ஆயிரம் கோடி மதிப்பிலான பங்குகள் அனைத்தையும் ஓஎன்ஜிசி நிறுவனம் வாங்கிக் கொள்ள மத்திய அரசு கட்டளையிட்டது. இதனால் மத்திய அரசுக்கு ரூ. 40,000 கோடி வருவாய் கிடைத்தது. ஆனால் ஓஎன்ஜிசி நிறுவனம் வேறு பல பகுதிகளில் எண்ணெய் எரிவாயு பணிகளை விரிவாக்கம் செய்ய முடியாமல் நெருக்கடிக்கு உள்ளானது. இந்த நெருக்கடியைச் சாக்கிட்டுத் தனியார் வந்து புகுவதற்கு வழி செய்யப்படும் என்று விளக்கத் தேவையில்லை.

எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தியில் உள்நாட்டு, வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு சாதகமான கொள்கையை மத்திய அரசு கடைப்பிடிக்கிற போதிலும், இந்தியாவினுடைய பெட்ரோலிய பொருட்களின் தேவையை கணிசமான அளவிற்கு பொதுத்துறை நிறுவனங்களே பூர்த்தி செய்து வருகின்றன. குறிப்பாக பாரத் பெட்ரோலியம் நிறுவனம் 2.75 கோடி டன் சுத்திகரிப்பு செய்கிறது. மத்திய அரசுக்கு ஆண்டுக்கு ரூ. 40 ஆயிரம் கோடி வரி செலுத்துவதோடு, ரூ. 11 ஆயிரம் கோடிக்கு மேல் லாபம் ஈட்டித் தருகிறது. இந்த நிறுவனத்தை முழுவதுமாக தனியாருக்கு விற்றுத் தன்னுடைய நிதி நெருக்கடியை ஈடுகட்டப் போவதாக மத்திய அரசு கூறுவதை என்னவென்பது? இதனுடன் ரூபாய் 40 ஆயிரம் கோடி மதிப்புள்ள இந்துஸ்தான் பாரத் எண்ணெய் நிறுவனத்தினுடைய பங்குகளை வாங்கியது ஓஎன்ஜிசி; தற்போது அப்பங்குகளை ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு விற்றுவிட மத்திய அரசு நிர்ப்பந்தம் கொடுத்து வருகிறது.

பாரத் பெட்ரோலிய நிறுவனத்தையும், இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்தையும் ரிலையன்ஸ் நிறுவனம் வாங்கி விட்டால் பொதுத்துறை நிறுவனங்களை விட ரிலையன்ஸ் நிறுவனம் கூடுதலாக எண்ணெய் சுத்திகரிப்பு செய்யும் வாய்ப்பு உருவாகும். இது எதிர்காலத்தில் எண்ணெய் விலையை ரிலையன்ஸ் கம்பெனி தீர்மா னிக்கும் நிலைக்கு இட்டுச் செல்லும் ஆபத்து உருவாகும்.

நடப்பு ஆண்டில் ஜூலை மாதம் முடிய மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறை ரூ.5.47 லட்சம் கோடி. பற்றாக் குறையைப் போக்க ரிசர்வ் வங்கியை வற்புறுத்தி ரூ. 1.76 லட்சம் கோடி மத்திய அரசு பெற்ற கதை நமக்குத்தெரி யும். அதேவேளையில் கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு ரூ.1.45 லட்சம் கோடி வரிச் சலுகையை இதே அரசு அளித்தது. ரூ.6 லட்சம் கோடி அளவுக்கு கார்ப்பரேட் நிறுவனங்களின் வராக்கடனை ரத்து செய்து சலுகையளித்ததையும் அனைவரும் அறிவோம். மக்கள் நலத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீட்டை வெட்டி சுருக்கி கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு கோடி கோடியாய் சலுகை அளித்து இதனால் ஏற்படும் நிதி நெருக்கடியை பொதுத்துறை நிறுவனங்க ளை விற்பதன் மூலம் ஈடுசெய்ய மத்திய அரசு முடி வெடுத்துள்ளது.

1991ம் ஆண்டிலிருந்து காங்கிரஸ் ஆட்சியாளர்களும், பாஜக ஆட்சியாளர்களும் மத்திய அரசின் நிதிப் பற்றாக் குறையை போக்குவதற்காக என பொதுத்துறைப் பங்குகளை விற்று வந்துள்ளனர். காங்கிரஸ் ஆட்சியாவது நட்டத்தில் இயங்கிய நிறுவனங்களை முற்றாக விற்பனை செய்தது. பாஜக அரசோ கோடி கோடியாய் இலாபமீட்டித் தருகிற பொதுத்துறை நிறுவனங்களையே விற்று வருகிறது.

**நன்றி: ‘தீக்கதிர்’**

# அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தை பெரியார் நடத்தியது ஏன்?

*அரசியல் சட்ட எரிப்பு நாளில் காணொளியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய உரை.*

**கொளத்தூர் மணி**

**1947 செப்டம்பர் 30 ஆம் நாள் ஒரு அவசர சட்டத்தை நிறைவேற்றி, 1936 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்ததை சுதந்திரம் பெற்றதாகச் சொல்லப்பட்ட ஒன்றரை மாத காலத்தில் அனைத்தையும் இரத்து செய்தார்கள்.**

தமிழ்நாட்டின் பல்வேறு வளர்ச்சிக்கு சமூக மேம்பாட்டிற்கு காரணமாக இருந்த தந்தை பெரியார் எடுத்த போராட்டங்களில் அரசியல் சட்ட எரிப்பு போராட்டம் என்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஏறத்தாழ நாம் அறிய உலகில் எந்த நாட்டிலும் , அந்த நாட்டின் போராட்டங்களில் அரசியல் சட்டம் எரித்ததாக இதுவரை நான் கேள்விப்பட்டதில்லை. அப்படி ஒரு போராட்டத்தை பெரியார் முன்னெடுத்தார். அதற்கு என்ன காரணம் என்பதையும் அதைநோக்கி பெரியார் நகர்வதற்கான சூழலையும் சற்று நாம் பார்த்து விடுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இந்தியாவில் பெரியார் பொது வாழ்க்கைக்கு வந்த பொழுது ஈரோடு அளவில் இருந்த பெரியார், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு வந்து அதன் தலைவராக பணியாற்றிய ஆறாண்டு காலத்தில், இந்திய விடுதலைப் போராட்டத்தில் போராடுபவர்களைப் பற்றி ஒரு கருத்து உருவாகிறது.

இந்திய விடுதலை போராட்டம் என்பதே பார்ப்பனர்கள் தாங்கள் இழந்துவிட்ட மேலாதிக்கத்தை, மேன்மையை மீண்டும் நிறுவிக் கொள்வதற்கான முயற்சி என்று தான் பெரியார் புரிந்து கொண்டிருந்தார். அப்படிப்பட்ட நிலையில் இந்தியாவிற்கு விடுதலை வருவதென்பது, இப்போது ஆங்கிலேய ஆட்சியில் கொஞ்சமேனும் சம உரிமை அனுபவித்துக் கொண்டிருக்கிற சூத்திரர்களுக்கும், பஞ்சமர்களுக்கும் எதிராக இருக்கும் என்பதாக பெரியார் கருதிக் கொண்டிருந்தார். விடுதலை வந்தபோதும், வெள்ளைக்காரன் கையிலிருந்து பார்ப்பன கொள்ளைக்காரன் கையில் மாற்றப்பட்டிருக்கிறது என்பதாகத் தான் கூறினார். அவர் எதிர் பார்த்ததைப் போன்று சில வருடங்களில் நடந்தது. அவருடைய முதன்மை இலக்கான ஜாதி ஒழிப்பில் இட ஒதுக்கீடு என்பதற்கும் அதற்கு முன் வகுப்புவாரி உரிமை என்று சொல்லப்பட்டதற்கும் மிகுந்த பொருத்தமுண்டு. சமூகத்தில் கல்வியிலும், அரசு வேலைவாய்ப்புகளிலும் நீண்ட நெடுங்காலமாக புறக்கணிக்கப்பட்டிருந்த ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி பெறுவதற்கும் அதன்வழியாக அரசு வேலைகளில் நுழைவதற்கும் அதனடிப்படையில் அதிகாரத்தில் நம் சமுதாயத்திற்கும் பங்கு உண்டு என்பதற்கு ஒரு வாய்ப்பாக கருதினார். அது நீதிக்கட்சி ஆட்சியில் 1921இல் அறிமுகப்படுத்தப்பட்டு 1922இல் உறுதி செய்யப்பட்டிருந்தாலும்கூட , 1929 இலிருந்து முழுமையாக நடைமுறைக்கு வந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. மாகாணப் பகுதிகளில் இருந்ததைப் போலவே 100 பணிகளும் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் இருந்ததைப் போலவே சென்னை மாகாணத்திலும் இயங்கி வந்த மத்திய அரசு நிறுவனங்களிலும் வகுப்புவாரி உரிமை சிறப்புச் சட்டம் நடைமுறையில் இருந்தது. 1935 ஆம் ஆண்டு சென்னை மாகாண பார்ப்பனரல்லாதார் வகுப்புவாரி உரிமைச் சட்டம் என்ற ஒரு சட்டத்தை மத்திய அரசு இயற்றி அதனடிப்படையில் சென்னை மாகாணத்தில் இயங்கி வருகிற மத்திய அரசு நிறுவனங்களில், அஞ்சல் துறையில், தொடர்வண்டித் துறையில், தமிழ்நாட்டில் இருந்ததைப் போலவே வகுப்புவாரி உரிமை முறையில் பணிகள் நியமிக்கப்பட்டன. 1936இலிருந்து நடைமுறையும் படுத்தப்பட்டது. பெரியார் அஞ்சியதைப் போல, 1947 ஆகஸ்டு 15 இந்தியாவிற்கு விடுதலை வந்ததாகச் சொன்னார்கள். 1947 செப்டம்பர் 30 ஆம் நாள் ஒரு அவசர சட்டத்தை நிறைவேற்றி, 1936ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்ததை சுதந்திரம் பெற்றதாகச் சொல்லப்பட்ட ஒன்றரை மாத காலத்தில் அனைத்தையும் இரத்து செய்தார்கள். அதுவே பெரியாருக்கு முதல் அதிர்ச்சியாக இருந்திருக்க வேண்டும். தொடர்ச்சியாக அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்ட பின்னால் அதே அரசியல் சட்டத்தை காரணம் காட்டி தமிழ்நாட்டில் இருந்துவந்த வகுப்புவாரி உரிமை செல்லாது என்று சென்னை உயர்நீதி மன்றமும் டெல்லி உச்சநீதிமன்றமும் தீர்ப்புகளை வழங்கின.

இதைப் பார்த்தவுடன் மீண்டும் ஓர் அதிர்ச்சிக்குள்ளான பெரியார், வடவர் ஆதிக்கத்தை எதிர்த்தும், மத்திய ஆட்சியிலுள்ள பார்ப்பன பனியாக்களின் அதிகாரத்திற்கு எதிராகவும் தன் போராட்டத்தை முன்னெடுக்க எண்ணிய அவர் முதலில், வடவர் கடைகளுக்கு எதிராக மறியல் என்று சென்னை ஆரியபவனுக்கு முன்னாலும், மிசன் சந்த் செல்லாராம் துணிக்கடைக்கு முன்னாலும் போராட்டத்தைப் பெரியார் தொடங்கினார். இப்படிப்பட்ட நிகழ்வு நடந்து கொண்டிருப்பதை ஒட்டியே தான், டிசம்பர் மாதமும் ஒரு போராட்டத்தை முன்னெடுத்தார். வகுப்புரிமை மாநாட்டை நடத்தி அதனடிப்படையில் பெரும் போராட்டம் நடைபெற்று அரசியல் சட்டம் திருத்தப்பட்டது. அதே நேரத்தில் இந்தி திணிப்பையும் மத்திய அரசு தொடங்கியிருந்தது. எனவே பெரியார் 1952 ஆகஸ்ட் மாதம், தொடர்ந்து 1953,1954 ஆகிய ஆண்டுகளிலும் இந்தி பெயர்ப் பலகை அழிப்பு போராட்டங்களை எடுத்து வந்தார். மற்றொரு பக்கம் வகுப்புவாரி உரிமை மீட்கப்பட்டிருந்தாலும் கூட, இவர்கள் தங்களுடைய ஆரிய பண்பாடுகளைத் திணிப்பதற்கு அப்போது ஆட்சியில் இருந்த இராஜாஜி செய்த முயற்சி தான் குலக்கல்வித் திட்டம். புதிய கல்வி கொள்கை என்று கொண்டு வந்தாலும், அதற்கு பெரியார் கொடுத்த பெயர் தான் குலக்கல்வித் திட்டம். ஒவ்வொரு பள்ளி மாணவனும் நண்பகலுக்கு முன் வரை கல்வியும் நண்பகலுக்கு மேல் தங்களுடைய குலத்தின் தொழிலையும் செய்ய வேண்டும் என்று கொண்டு வந்த சட்டம்.

மீண்டும் பழைய வர்ணாசிரம கொள்கை கொண்டு வரப்படுகிறது என்ற கோபம் பெரியாருக்கு வந்தது அதனடிப்படையில் இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கும், வடவர் ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கான அறிகுறியாய் இப்போது ஜனநாயக வழியில் வர்ணாசிரமத்தை நிலைநாட்டத் துடிக்கிற இராஜாஜிக்கும், அந்த அரசிற்கும் எதிராக ஓர் எச்சரிக்கை என்ற பெயரால் அவர், அடையாளமாக வர்ணாசிரமத்தை காப்பாற்றுகிற இந்து மதத்திற்கும், வடவர் ஆதிக்கத்திற்கும் எதிராக விநாயகர் சிலை உடைப்பு போராட்டத்தையும், புத்தர் பிறந்தநாள் விழாவில் அறிவித்து அந்த போராட்டமும் ஒரு பக்கம் நடந்தது.

மற்றொரு பக்கம் இராமர் பட எரிப்புப் போராட்டம், தொடர்ந்து இந்தி திணிப்பை எதிர்த்து போராட்டம். 1952 ஆம் ஆண்டு அறிவித்தார், "இப்படியே தொடர்ந்து இந்தியை திணிக்கும் முயற்சியும், வர்ணாசிரம சமுதாயத்தை படைக்கும் முயற்சியும் தொடருமேயானால் அரசியல் சட்டத்தை எரிக்க நான் தயங்கமாட்டேன்" என்று ஓர் தலையங்கத்தில் பெரியார் எழுதினார்.

அதற்கு ஓராண்டு கழித்து 1953 ஆம் ஆண்டு புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் நாடாளுமன்றத்தில் ஓர் விவாதத்தில் "அரசியல் சட்டத்தை எழுதியது நானாக இருக்கலாம். ஆனால் அதை எரிக்கப்போகும் முதல் ஆளாகவும் நானாக இருப்பேன்" என்று அறிவித்தார். அரசியல் சட்டத்தை எரிப்பது எதனடிப்படையில்? ஜாதியை பாதுகாக்கும் அரசியல் பிரிவுகளை எரிக்க வேண்டும் என்று பெரியார் சொன்னார். அவை எந்தெந்த பிரிவுகள் என்று பார்க்கிற போது குறிப்பாக "பழக்க வழக்கங்கள்" என்ற பிரிவு அரசியல் சட்டத்தில் வலிமையாக இடம் பெற்றிருப்பது பெரியாருக்கு சட்ட எதிர்ப்பைத் தூண்டியது.

பெரியார் இதை ஆரம்பத்திலிருந்தே கண்காணித்து வந்து கொண்டிருந்தார். 1929 ஆம் ஆண்டு சென்னை நேப்பியர் பூங்காவில் நடைபெற்ற ஆதி திராவிடர்கள் மாநாட்டு சொற்பொழிவில் கூறுகிறார். "இதுவரை பார்ப்பனர்கள் நம்மை ஒடுக்குவதற்கு கடவுளைக் காட்டினார்கள், மதத்தைக் காட்டினார்கள், வேதத்தைக் காட்டினார்கள், சாஸ்திரத்தைக் காட்டினார்கள் இப்போது பழக்க வழக்கம் என்ற ஒன்றை புதிதாக கொண்டு வந்து வைக்கிறார்கள் நாம் இதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்று அந்த மாநாட்டு உரையில் கூறுகிறார். அடுத்து 1931ஆம் ஆண்டு கராச்சியில் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு கூடுகிறது. அந்த மாநாட்டிற்கு முன் மோதிலால் நேரு தலைமையில், நேரு குழுவை அமைத்திருந்தார்கள். விடுதலை பெற்ற இந்தியாவில் ஜீவாதார உரிமை, பிரஜா உரிமை எப்படி இருக்கும், சுதந்திர இந்தியாவில் வாழ்வாதாரம் மற்றும் உரிமைகள் எப்படி இருக்கும் அதாவது சட்டம் எப்படி இருக்கும் என்பதை அறிக்கையாக அந்தக் குழு கராச்சி மாநாட்டில் முன் வைத்தது. இந்த கராச்சி மாநாட்டில் முன் வைக்கப்பட்ட 'பிரஜா உரிமை திட்டம்' என்பது மதச் சார்பின்மைக்கு பதிலாக மத நடுநிலைமை என்று இருந்தது. ஒவ்வொரு தனி மனிதனின் நம்பிக்கைகளும், மொழியும் பாதுகாக்கப்படும் என்று குறிக்கப்பட்டிருந்தது. பெரியார், 'பழக்க வழக்கம்' சட்டப்படி காப்பாற்றப்பட வேண்டும் என்று கூறுவதை ஜாதி தீண்டாமையை வைத்திருப்பதற்கான முயற்சியாகத் தான் பார்த்தார். மாநாடு முடிந்த உடனேயே 'குடி அரசு' ஏட்டில் 'கராச்சி மாநாடு' என்ற தலைப்பில் மூன்று வாரம் தலையங்கம் எழுதினார்.

இவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த பிரஜா உரிமை (அடிப்படை உரிமை) திட்டம் என்பது, பார்ப்பனர்களின் பண்பாடான ஜாதிய வர்ணா சிரமத்தை நிலை நாட்டிக் கொள்வதற்கு, மத நடுநிலைமை என்ற பெயரால் இந்து மதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் புரிந்து கொண்டிருந்தார். அதற்கு எதிராக 1931 ஆம் ஆண்டே ஆகஸ்டு மாதத்தில் விருதுநகர் மாநாட்டைக் கூட்டி அதில் இதற்கு எதிரான தீர்மானங்களை பெரியார் நிறைவேற்றினார். ஆக பெரியாரைப் பொருத்தவரை பழக்க வழக்கம் என்ற சொல் மிகவும் ஆபத்தான சொல் அந்த சொல்லைப் பயன்படுத்தித் தான் ஜாதியை நிலைநாட்டப் பார்க்கிறார்கள். ஜாதிக்கு பாதுகாப்பு வழங்கப்படுகிறது என்பது தான் அவருடைய கருத்தாக இருந்தது. இன்றைக்கு கூட, தமிழ்நாட்டில் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக வேண்டும், அதற்கான பயிற்சி என அனைத்தும் பெற்ற முடிந்த நிலையிலும் உச்சநீதிமன்றம் தீர்ப்பு சொல்கிறது, 'பழக்க வழக்கத்தை மாற்றியமைக்க முடியாது எனவே இந்த சட்டம் செல்லாது' என்று உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பினை சமீபத்தில் வழங்கியது.

பழக்க வழக்கம் என்பதற்கு ஆங்கிலேய ஆட்சியில் 'பிரிவி கவுன்சிலில்' கூட, எழுதப்பட்ட சட்டங்களை விட நடைமுறையில் இருக்கும் பழக்க வழக்கங்கள் தான் வலுவானவை என்பதாக ஒரு தீர்ப்பை பெற்று வைத்திருந்தனர். அரசியல் சட்டத்தின் 13 ஆவது பிரிவு சட்டம் குறித்த விளக்கம் தருகிறபோது, 'நாடாளு மன்றம், சட்டமன்றம். இயற்றிய சட்டங்கள், அரசினுடைய ஆணைகள், அரசினுடைய சுற்றறிக்கைகள், அரசினுடைய குறிப்பாணைகள், மட்டுமில்லாமல் பழக்க வழக்கங்களுக்கும் சட்ட வலிமை உண்டு' என்று அந்த சட்டம் விளக்கம் கூறுகிறது. அதே போல 372 என்கிற பிரிவு 'ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வருகிறவை குறிப்பாக உரிய அதிகாரம் பெற்ற அமைப்பால் மாற்றியமைக்கப்பட்டால் ஒழிய அனைத்தும் தொடர்ந்து நடைமுறையில் இருப்பதாகவே கருதப்படும் என்று கூறுகிறது. ஆக பழக்க வழக்கம் என்பது இந்த ஜாதிய பழக்க வழக்கங்கள் உட்பட சட்டப்படி ஏற்றுக் கொள்ளப் படும் என்பதாக பெரியார் கருதினார். எனவே அதை மாற்றியமைக்க ஒரே வழியாக அரசியல் சட்டத்தில் 368 என்ற பிரிவு இருந்தது. அந்த பிரிவு 'சட்டமன்ற, நாடாளுமன்ற அவையில் கூடியிருக்கிற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு வாக்களித்தால் மட்டுமே திருத்த முடியும்' என்று கூறுகிறது. தென்னிந்தியர்கள் அனைவரும் சேர்ந்தாலும் 120 உறுப்பினர்கள்தான் இருக்கிறோம். ஆனால், 5இல் ஒன்று அல்லது நான்கில் ஒன்றாக இருக்கும் நாம் எப்படி மூன்றில் இரண்டு பங்கு பெற்று எப்படி நமக்கான விதிகளை கொண்டு வர முடியும் என்பது பெரியாரின் கருத்தாக இருந்தது. மேலும், மத பாதுகாப்பிற்கு உண்டான 25 போன்ற பிரிவுகளும் ஜாதியைக் காப்பாற்றுகின்றன என்று கருதினார். எனவே அதை எரிக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு தொடர்ந்து இருந்திருக்கிறது.

1952இல் அவர் சட்டத்தை எரிப்பதாக அறிவித்திருந்தாலும், அதற்குப் பின்னால் பல நிகழ்வுகள் தொடர்ந்து இந்த ஆட்சியின் மீது அரசியல் அமைப்பின் மீது நம்பிக்கை இழக்கச் செய்திருக்கிறது. குறிப்பாக விடுதலை பெற்ற நாட்டில், அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்து விட்ட பின்னால் தனக்கு சமமாக உட்கார்ந்து பேசினார் என்பதற்காகவே இமானுவேல்சேகரன் அவர்கள் 1957ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கொலை செய்யப்படுகிறார். அது மீண்டும் பெரியாரின் மனதை அதிரச் செய்தது. இது குறித்து 2.11.1957ஆம் ஆண்டு 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏட்டில் ஒரு பேட்டியில், 'இதற்கு சரியான நடவடிக்கை எடுக்காவிட்டால் நானே வீதியில் இறங்கி போராடுவேன்' என்று கூறினார். அந்த அளவிற்கு பெரியார் மனதில் ஒரு தாக்கத்தை இந்நிகழ்வு ஏற்படுத்தியிருக்கிறது. இவையனைத்தும் சேர்த்துத் தான் பெரியார் ஒரு மாநாட்டை கூட்டுகிறார். பெரியாரியத் தொண்டர்கள் அந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்கிறார்கள். பெரியாருக்கு எடைக்கு எடை வெள்ளி வழங்கும் நோக்கத்தோடும், பெரியாருக்கு பிறந்தநாள் விழா கொண்டாடும் நோக்கத்தோடும் தஞ்சையில் ஒரு மாநாட்டைக் கூட்டுகிறார்கள். 1957 ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் தேதி தஞ்சையில் அந்த சிறப்பு மாநாடு நடைபெறுகிறது. எடைக்கு எடை வெள்ளி வழங்கப்படுகிறது. இம்மாநாடு தான் தமிழ்நாட்டில் அதிகளவில் மக்கள் கூடிய நிகழ்வு என்று பதிவாகியுள்ளது. 3 இலட்சம் மக்கள் கலந்து கொண்டதாக குறிப்பிடுகிறார்கள்.

(தொடரும்)

– புரட்சிப் பெரியார் முழக்கம் 05.12.2019

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# திருப்பூரில் சட்ட எரிப்பு நாள்- வீரவணக்கப் பொதுக் கூட்டம்




திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் ஜாதியை பாதுகாக்கும் சட்ட பிரிவுகளை எரித்த நாள் பொதுக் கூட்டம் திருப்பூர், 15 வேலம்பாளையம் பகுதியில் 26.11.2019 அன்று மாலை 6 மணிக்கு நடைபெற்றது.

மாவட்ட அமைப்பாளர் சங்கீதா வரவேற்புரையாற்றினார். முதல் நிகழ்வாக முடிவெய்திய தோழர் இராவணன் படத்தை கழகத் தலைவர் திறந்து வைத்தார். இராவணனுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

பொதுக் கூட்டத்திற்கு இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார் தலைமை வகித்தார். மேட்டூர் டி.கே.ஆர். கலைக் குழுவினர் பகுத்தறிவுப் பாடல்கள் பாடினர். அவர்களுடன் பெரியார் பிஞ்சுகள் யாழினி, யாழிசை, அமுதினி ஆகியோரும் பகுத்தறிவுப் பாடல்களைப் பாடினார்கள்.

அதனைத் தொடர்ந்து நடந்த பொதுக்கூட்ட நிகழ்வில், கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, மாவட்டத் தலைவர் முகில்ராசு, பொள்ளாச்சி வெள்ளியங்கிரி, மடத்துக்குளம் மோகன் ஆகியோரும், தமிழ்நாடு மாணவர் கழகத்தின் தோழர்கள் கனல்மதி, பிரசாந்த், தேன்மொழி, சந்தோஷ் ஆகியோரும் சட்ட எரிப்பு நாளைப் பற்றி பேசினார்கள். தொடர்ந்து தமிழ்நாடு சாக்கிய அருந்ததிய சங்கத் தலைவர் மதிவண்ணன் உரையாற்றினார். மேடையில் தோழர்கள் சாரதி - இனியவன் இணையரின் பெண் குழந்தைக்கு கழகத் தலைவர் இயலருவி என்று பெயர் சூட்டினார்.

பின் சட்ட எரிப்புப் போராளிகளின் வரலாற்றைக் கூறி கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். பொதுக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக வருகை புரிந்த ஆனைமலை பகுதியைச் சார்ந்த அய்யா ஆறுமுகம் அவர்களுக்கு பயனாடையை கழகத் தலைவர் அணிவித்து சிறப்பு செய்தார். முத்து நன்றி கூறினார்.

# ஈழ தேசியத் தலைவர் பிரபாகரன் பிறந்த நாள்: சென்னையில் கேக் வெட்டி கொண்டாட்டம்



தமிழ் ஈழத் தேசியத் தலைவர் பிரபாகரன் 65ஆம் பிறந்த நாள் நவம்பர் 26ஆம் தேதி பகல் 11 மணியளவில் அம்பத்தூர் தாய்த் தமிழ்ப் பள்ளியில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

திராவிடர் விடுதலைக் கழகம் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் நடிகர் சத்திய ராஜ், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் சரசுவதி, தியாகு ஆகியோர் கலந்து கொண்டனர்.

‘கற்க’ அறக்கட்டளை சார்பில் கழகப் பொறுப்பாளர் அண்ணாமலை பள்ளிக் குழந்தைகளுக்குப் புத்தகப் பை, நோட்டுகளை வழங்கினார். மாவட்டக் கழகத் தலைவர் வேழவேந்தன், செயலாளர் உமாபதி மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

55 வருட பட்டின் பாரம்பரிய ஸ்தாபனம்...
**சிந்தாமணி சில்க்ஸ்**
**கைத்தறி திருமண பட்டு சேலை தயாரிப்பாளர் & மொத்த விற்பனையாளர்**
**ஹோல்சேல் கடை**
**சிந்தாமணியூர், ஓமலூர் வழி, சேலம்.(DT).**
**04290 248304/ 90952 48304**
chinthamanisilks | www.chinthamanisilks.com

# கொளத்தூர் ‘புலியூரில்’ மாவீரர் நாள்




தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் சேலம் கொளத்தூர் புலியூர் பிரிவில் உள்ள பொன்னம்மான் நினைவு நிழற்கூடத்தில் 26.11.2019 அன்று மாலை 5 மணிக்கு மாவீரர் நாள், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. மாவீரர் நாள் பாடல் மாலை 6 மணிக்கு ஒலிக்க, மெழுகுவர்த்தி ஏந்தி தோழர்கள் நினைவு கூர்ந்தனர்.

சட்டமன்ற உறுப்பினர் உ.தனியரசு மாவீரர் நாள் உரையாற்றினார். புலிகள் பஞ்சர் கடை சுப்பிரமணி நன்றி கூறினார். கழகத் தோழர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் என 1000 ற்கும் மேற்பட்டோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# நீலம் பண்பாட்டு மய்யம் நடத்திய அரசியலமைப்புச் சட்ட நாள் கருத்தரங்கம்




நீலம் பண்பாட்டு மய்யம் சார்பில் ‘இந்திய அரசியல் அமைப்புச் சட்ட நாள் கருத்தரங்கம்’ நவம்பர் 26ஆம் தேதி மாலை சென்னை சேத்துப்பட்டு உலக பல்கலைக் கழக சேவை மய்யத்தில் நடந்தது. ‘பிளாக் பாய்ஸ்’ குழுவினரின் கானா மற்றும் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இயக்குனர் ரஞ்சித் அறிமுக உரையாற்றினார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், அரசியலமைப்பு நகலை அறிமுகம் செய்து, புரட்சியாளர் அம்பேத்கர் நிகழ்த்திய ஆழமான உரையை சுட்டிக் காட்டிப் பேசினார். அம்பேத்கர் மொழி வழி மாநிலப் பிரிவினைக்குப் பிறகு எழுதிய நூலில் வடநாடு பிற்போக்கானது; தென்னாடு முற்போக்கானது. இந்தி பேசும் மாநிலங்கள் தென்னகத்தை அடக்கியாளுவதற்கேற்ப மாநிலப் பிரிவினை நடத்தியிருக்கிறது. இந்தியாவுக்கு தென்னாட்டில் ஹைதராபாத்திலும் ஒரு தலைநகரம் உருவாக்க வேண்டும் என்று எழுதியிருப்பதை சுட்டிக்காட்டினார்.

நிகழ்வில் ஆம்ஸ்ட்ராங் (பகுஜன் சமாஜ் கட்சி), சிந்தனைச் செல்வன் (விடுதலை சிறுத்தைகள்), திருமுருகன் காந்தி (மே 17), ஜவாஹிருல்லா (மனித நேய மக்கள் கட்சி), ஜக்கையன் (ஆதி தமிழர் கட்சி), யாக்கன் (எழுத்தாளர்), வழக்கறிஞர் அஜிதா ஆகியோர் உரையாற்றினர். அரங்கம் முழுதும் கூட்டம் நிரம்பி வழிந்தது. புரட்சியாளர் அம்பேத்கர் சிந்தனைகளை பல்வேறு கோணங்களில் வரலாற்றுப் பின்புலத்தோடு கருத்தாளர்கள் உரையாற்றினர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

முழக்கங்கள் எழுப்பியும் மற்றும் உறுதிமொழி எடுத்தும் மரியாதை செய்யப்பட்டது. நிகழ்விற்கு மாநகரத் தலைவர் நேருதாஸ் தலைமை வகித்தார். லீலாவதி சட்ட எரிப்பு நாள் உறுதிமொழியை வாசிக்க தோழர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் மாநகர தோழர்கள் மற்றும் ஆதரவாளர்கள் நிர்மல் குமார், நேருதாசு, வெங்கட், லோகு, இயல், கிருஷ்ணன், லீலாவதி, துளசி, ராஜாமணி, அறிவரசு, மாதவன் சங்கர், புரட்சி மணி, ஜெயச்சந்திரன், சங்கனூர் கிருஷ்ணமூர்த்தி, பூரண பவித்ரன், கார்மேகம், சௌந்தர், ஸ்டாலின் ராஜா, சுசி. கலையரசன் (விசிக) ஆகியோர் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 06th December 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்